| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 49/2010 | சாட்ச | வா.சா.4 |
| பெயர் | பெரியசாமி | நாள் | 08.11.2021 |
| தகப்பனார் பெயர் | செங்கோட கவுண்டர் | | |

5, 11 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கு குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 8.80 ஏக்கர் எந்த காலகட்டத்தில் எப்போது வாங்கியது என்பது எனக்கு தெரியுமா என்றால் வாங்கியது தெரியும். எந்த வருடம் என்பது தெரியாது. 3 பத்திர வகையில் பாத்தியப்பட்டது. யாரிடம் வாங்கினார்கள், எந்த சர்வே எண்ணில் வாங்கப்பட்டது என்பது தெரியுமா என்றால் வாங்கியது தெரியும். சர்வே எண் தெரியாது. என்னுடைய பாட்டி யாரிடம் இருந்து வாங்கியதாக கூறுகிறேன் என்றால் எனக்கு தெரியாது. விற்பனை செய்தவர் எவ்வளவு நிலம் வைத்திருந்தார், எவ்வளவு நிலம் எங்களுக்கு கொடுத்தார், என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் பழைய சர்வே எண் ஞாபகம் இல்லை. ராமசாமி, புண்ணியமூர்த்தி ஆகியோர் நிலம் வாங்கியது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ராமசாமி, புண்ணியமூர்த்தி ஆகியோர் தகுந்த மறுபயன் செலுத்தி கிரையம் பெற்றுள்ளார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் உரிய முறையில் மறுபயன் செலுத்தி கிரையம் பெற்றுள்ளார்கள் எனவும், அது குறித்து எனக்கு தெரியாது என்பதால் அந்த சொத்துகள் குறித்து பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல.

ஒப்பம்/—எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.